## நடப்பு நிகழ்வுகள்: மார்ச் 12-14, 2017

### 1. புதிய மிஸ் சர்வதேச ராணி 2016 பட்டத்தை Jiratchaya Sirimongkolnawin பெற்றுள்ளார். இவர் எந்த நாட்டை சேர்ந்தவர் ?

A. வெனிசுலா
B. தென் கொரியா
C. பிரேசில்
D. தாய்லாந்து

**விடை: D. தாய்லாந்து**

உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் பிரபலமான திருநங்கைகள் அலங்கார அணிவகுப்பு போட்டியில் தாய்லாந்தை சேர்ந்த Jiratchaya Sirimongkolnawin, புதிய மிஸ் சர்வதேச ராணி 2016 பட்டத்தை பெற்றுள்ளார். அழகி அணிவகுப்பின் இந்த 12 வது பதிப்பு மார்ச் 10, 2017 அன்று தாய்லாந்தின் பட்டாயா சிட்டியில் நடைபெற்றது. இந்த அழகு போட்டியின் நோக்கமானது, LGBT மற்றும் திருநங்கை விழிப்புணர்வு மற்றும் சமூகம், வேலைசெய்யும் இடங்களில் சமத்துவத்தை குறிவைக்கிறது.

### 2. 2017 காமன்வெல்த் தினத்தின் மையக்கரு என்ன ?

A. Team Commonwealth
B. An Inclusive Commonwealth
C. A peace-building Commonwealth
D. A Young Commonwealth

**விடை: C. A peace-building Commonwealth**

காமன்வெல்த் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தின் இரண்டாவது திங்கள் அன்று அனுசரிக்கப்படுகிறது, இது தனிநபர்கள், சமூகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு காமன்வெல்த்தை குறிக்கும் அமைதி, ஜனநாயகம், சமத்துவம் ஆகிய மதிப்புகளை ஊக்குவிக்க ஒரு வாய்ப்பை வழங்குகிறது. 2017 காமன்வெல்த் தினம் “A Peace-building Commonwealth” என்ற மையக்கருவுடன் மார்ச் 13-ம் தேதி கொண்டாடப்படுகிறது.

**3. 2017 ஹீரோ இந்தியன் ஓபன் கோல்ப் தொடரை வென்றுள்ளவர் யார் ?**

A. ஜோதி ரன்தாவா
B. சிவ சௌராசியா
C. சின்னசாமி முனியப்பா
D. அனிர்பன் லஹிரி

**விடை: B. சிவ சௌராசியா**

இந்தியாவை சேர்ந்த சிவ சங்கர் பிரசாத் சௌராசியா, ஹரியானாவின் குருகிராமில் உள்ள மறுவடிவமைப்பு செய்யப்பட்ட டிஎல்எ்ஃப் கோல்ஃப் மற்றும் கண்ட்ரி கிளப்பில் நடைபெற்ற 2017 ஹீரோ இந்தியன் ஓபன் கோல்ப் தொடரில் 7 ஸ்ட்ரோக் அடித்து வெற்றி பெற்றுள்ளார். இது இவரது 6-வது ஆசிய டூர் வெற்றி மற்றும் ஒட்டுமொத்தமாக 6-வது சர்வதேச வெற்றியாகும். இந்த வெற்றியின் மூலம், ஜீவ் மில்கா சிங் மற்றும் தொங்க்சை ஜெய்தீ ஆகியோரை அடுத்து நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட ஐரோப்பிய டூர் பட்டங்களை வென்ற மூன்றாவது ஆசிய வீரர் என்ற பெருமையை பெற்றார். இது தவிர, ஜோதி ரன்தாவாவை அடுத்து ஹீரோ இந்திய ஓபன் பட்டத்தை தக்கவைத்த இரண்டாவது இந்திய கோல்ப் வீரராக சௌராசியா திகழ்கிறார்.

**4. "Aurangzeb: The Man and the Myth" என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார் ?**

A. ஆட்ரே ட்ரஷ்ச்கே
B. சம்பத் குமார்
C. ஆண்ட்ரேஜ் ப்ளேன்கோவிக்
D. பீம் சந்திரா நாக்

**விடை: A. ஆட்ரே ட்ரஷ்ச்கே**

வரலாற்றாசிரியர் ஆட்ரே ட்ரஷ்ச்கே, "Aurangzeb: The Man and the Myth" என்ற புத்தகத்தினை எழுதியுள்ளார். இது ஆறாவது முகலாய பேரரசர் அவுரங்கசீப்பின் சிக்கலான மற்றும் போட்டியிட்ட வாழ்க்கை கதையை திரும்ப கூறுகிறது. இந்து- முஸ்லீம் உறவு மற்றும் அதற்கு அப்பாற்பட்டவை

மீதான சமகால சொற்பொழிவில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திவந்த ஒரு பேரரசரின் ஒரு கண்கவர் சுயசரிதையாக இது உள்ளது. அவுரங்கசிப், அவரின் மரணத்தின் போது தான் அந்நியனாக வந்தேன், அந்நியனாகவே செல்கிறேன் என்ற அவரின் கவலையை இந்த புத்தகம் தீர்க்கிறது. சிக்கலான நபர்களின் வரலாற்று சுயசரிதைகளை எப்படி எழுதலாம் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இந்த நாவல் உள்ளது.

**5. 2017 அனைத்து இங்கிலாந்து ஓபன் பேட்மின்டன்(All England Open badminton) சாம்பியன் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றுள்ளவர் யார் ?**

A. லியு யிங் கோயா
B. ஷி யூகி
C. லூ காய்
D. லீ சோங் வெய்

**விடை: D. லீ சோங் வெய்**

மலேசியாவை சேர்ந்த லீ சோங் வெய், ஐக்கிய ராஜ்ஜியத்தின் பர்மிங்காமில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் சீனாவின் ஷி யூகியை 21-12, 21-10 என்ற புள்ளிகளில் தோற்கடித்து, 2017 அனைத்து இங்கிலாந்து ஓபன் பேட்மின்டன்(All England Open badminton) சாம்பியன் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றுள்ளார். இது இவரின் 5-வது ஒற்றையர் பட்டமாகும். இது தவிர, சீன ஜோடிகளான Lu Kai மற்றும் Huang Yaqiong ஆகியோர் மலேசிய இரட்டையர்களான Peng Soon Chan மற்றும் Liu Ying Goah-வை இறுதிஆட்டத்தில் 18-21, 21-19, 21-16 என்ற புள்ளிகளில் தோற்கடித்து இரட்டையர் கலப்பு பிரிவில் வெற்றி பெற்றனர்.

**6. சைபர் தணிக்கைக்கு எதிரான உலக தினம்(World Day Against Cyber Censorship), எந்த தேதியில் அனுசரிக்கப்படுகிறது ?**

A. மார்ச் 11
B. மார்ச் 13
C. மார்ச் 12
D. மார்ச் 10

**விடை: C. மார்ச் 12**

சைபர் தணிக்கைக்கு எதிரான உலக தினம், அனைவரும் அணுகக்கூடிய ஒரு தனியான, கட்டுப்பாடற்ற இணையம் வேண்டி ஆதரவு திரட்ட மற்றும் உலகம் முழுவதும் உள்ள அரசாங்கங்கள், இணையத்தில் சுதந்திரமாக பேசுவதை எந்தெந்த வழிகளில் தடை மற்றும் தணிக்கை செய்கின்றன என்பது குறித்த கவனிப்பை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 12 ஆம் தேதி நடைபெறும் ஒரு ஆன்லைன் நிகழ்வாகும். இந்த ஆண்டு நிகழ்வானது, Reporters Without Borders மூலம் உருவாக்கப்பட்ட ஒரு சின்னம் மூலம் சித்தரிக்கப்படுகின்றது. கணினி சுட்டியானது சங்கிலியை உடைத்து வெளியேறுவது போன்று சின்னம் உருவாக்கப்பட்டுள்ளது.

**7. 2017 ஆசிய தடகள சாம்பியன்ஷிப்பின்( Asian Athletics Championship) 22-வது பதிப்பை, எந்த நாடு நடத்துகிறது ?**

A. ஜப்பான்
B. இந்தியா
C. சீனா
D. தென் கொரியா

**விடை: B. இந்தியா**

ஆசிய தடகள சாம்பியன்ஷிப்பின் 22-வது பதிப்பு, இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் உள்ள கலிங்கா ஸ்டேடியத்தில்(புவனேஷ்வர்) 2017 ஜூலை மாதத்திலிருந்து நடைபெறும். இந்த நிலையில், 1989 ஆம் ஆண்டு புது தில்லி மற்றும் 2013-ல் புனே ஆகிய நகரங்களை அடுத்து தடகள சாம்பியன்ஷிப் நடத்தும் இந்தியாவின் 3-வது நகரம் என்ற பெருமையை புவனேஸ்வர் பெறுகிறது. 45 நாடுகளைச் சேர்ந்த சுமார் 800 வீரர்கள் போட்டியில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**8. 2017 உலக சிறுநீரக தினத்தின் (World Kidney Day) மையக்கரு என்ன ?**

A. Kidneys for Life - Stop Kidney Attack!

B. Kidney Disease & Children: Act Early to Prevent It

C. Kidney Disease and Obesity: Healthy Lifestyle for Healthy Kidneys

D. Chronic Kidney Disease (CKD) and aging

**விடை: C. Kidney Disease and Obesity: Healthy Lifestyle for Healthy Kidneys**

உலக சிறுநீரக தினம்(WKD), உலகம் முழுவதும் சிறுநீரக நோய் மற்றும் அதனுடன் தொடர்புடைய சுகாதார பிரச்சினைகளின் தாக்கம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஒரு உலக சுகாதார விழிப்புணர்வு பிரச்சாரமாக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தின் 2-வது வியாழன் அன்று அனுசரிக்கப்படுகிறது. உலக சிறுநீரக தினமானது, சிறுநீரக அமைப்புகளின் சர்வதேச கூட்டமைப்பு (IFKF) மற்றும் சர்வதேச சிறுநீரகவியல் சமூகத்தின் (ISN) ஒரு கூட்டு முயற்சி ஆகும். 2017 ஆம் ஆண்டு உலக சிறுநீரக தினம், உடல் பருமனின் தீய விளைவுகள் மற்றும் சிறுநீரக நோயில் உடல்பருமனின் தாக்கம், ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் மலிவு முறையில் தடுப்பு முறைகளை வழங்கும் சுகாதார கொள்கை நடவடிக்கைகள் ஆகியவை பற்றிய கல்வியை ஊக்குவிக்க "Kidney Disease and Obesity: Healthy Lifestyle for Healthy Kidneys" என்ற மையக்கருவுடன் மார்ச் 9-ஆம் நாள் அனுசரிக்கப்படுகிறது.

**9. எந்த இந்திய கால்பந்து அணி, 2017 சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியில் வென்றுள்ளது ?**

A. பஞ்சாப்
B. இரயில்வே
C. குஜராத்
D. கேரளா

**விடை: A. பஞ்சாப்**

பஞ்சாப் கால்பந்து அணி, கோவாவில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் ரயில்வே அணியை 2-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து 71-வது சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியை வென்றுள்ளது. இது பஞ்சாப்பிற்கு, 9-வது சந்தோஷ் கோப்பை ஆகும்.

**10. இந்தியாவின் புதிதாக நியமிக்கப்பட்ட பாதுகாப்புதுறை அமைச்சர் யார் ?**

A. நிதின் கட்காரி
B. ராஜ்நாத் சிங்
C. அருண் ஜெட்லி
D. முக்தார் அப்பாஸ் நக்வி

**விடை: C. அருண் ஜெட்லி**

இந்திய அமைச்சரவையில் தற்போதைய நிதி அமைச்சர் மற்றும் பெருநிறுவன விவகார அமைச்சராக உள்ள அருண் ஜெட்லி, 2017 மார்ச் 14 ஆம் தேதி மத்திய பாதுகாப்புதுறை (MoD) அமைச்சகத்திற்கு கூடுதலாக பொறுப்பு எடுத்துள்ளார். கோவாவின் முதலமைச்சர் பொறுப்பை ஏற்க உள்ள மனோகர் பாரிக்கர், தனது பாதுகாப்புதுறை அமைச்சர் பதவியை இராஜிநாமா செய்துள்ளதை அடுத்து ஜெட்லி அந்த இடத்தை நிரப்புகிறார். தற்போதைய NDA ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சின் கூடுதல் பொறுப்பை அருண் ஜெட்லி வைத்திருப்பது, இது 2-வது முறையாகும். இதற்கு முன்னதாக, 2014 ஆம் ஆண்டு 26 மே முதல் 9 நவம்பர் வரை இந்த அமைச்சகத்திற்கு இவர் பொறுப்பு வகித்தார்.